**OS.394/2021** **D.W.1-ராமன்** **08.08.2025**

<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

வழக்கு பற்றிய விபரங்கள் எனக்கு தெரியும். நான் இந்த வழக்கில் எனக்காகவும் என் மனைவிக்காகவும் சேர்த்து சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரிதான். வாதி இந்த வழக்கை உண்மைகளை மறைத்து தாக்கல் செய்திருப்பதாக எதிர்வள குறையில் கூறியுள்ள நிலையில் என்னென்ன உண்மைகளை அவ்வாறு மறைத்துள்ளார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வாதி சட்டப்படி என் மீதும் இரண்டாம் பிரதிவாதி மீதும் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ஹரி கிருஷ்ணன் என்பவரை எனக்கு தெரியாது. ஹேமலதாவுக்கு சொத்து எப்படி பாதிக்கப்பட்டது என்று எனக்கு தெரியும். சொத்தை வாங்குவதற்கு முன்பு சட்ட கருத்துரை பெற்று வாங்கினேன் என்றால் சரிதான். தாவா சுத்தானது அருண் என்பவருக்கு பாதியப்பட்டு அவரது பொது அதிகார முகவர் மூலம் ஹேமாவிற்கு சொத்து விற்கப்பட்டது என்றால் முன்னோர் ஆவணங்களை பற்றி கேள்வி கேட்பதால் ஆவணங்களை பார்த்து தான் சொல்ல முடியும்.

(நேரமின்மையால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)